# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

## விஞ்ஞானம் -

தரம் : 7

## பிரயோகச் செயற்பாட்டு (இல. 01)

**தேவையான பொருட்கள்**

- அமில, மூல, நடுநிலை கரைசல்கள் மூன்று
- A,B,C எனப் பெயரிட்ப்பட்ட முகவைகள் 3
- கரைசல்களை எடுப்பதற்குப் பொருத்தமான உபகரணங்கள் (pumper) 3
- வேறாக எடுத்த கரைசல்களை இடுவதற்குப் பொருத்தமான உபகரணங்கள் மூன்று
- நீல சிவப்பு பாசிச்சாயத்தாள்

**ஆசிரியருக்கான அறிவுறுத்தல்**

- சகல மாணவர்களுக்கும் போதுமான அளவு கரைசல் தயாரித்து அவற்றை 3 முகவைகளுக்கும் கரைசல்களை ஒவ்வொன்றாகக இட்டு A,B,C எனப் பெயரிடுக
- தேவையான கரைசல்களை வேலை மேசையில் வைத்து மாணவர்களுக்கு செயலட்டையை வழங்கி செயலில் ஈடுபடுத்துக.
- கரைசல்களில் சிறிதளவு எடுத்து அவற்றைப் பரிசோதித்து இனங்காண அறிவுரை கூறவும்
- கரைசல்களை எடுக்க ஒரே உபகரணத்தைப் பயன்படுத்தாதவாறு கவனித்துக் கொள்க

**நியதிகள்**

1) பொருத்தமான உபகரணங்களைத் தெரிவு செய்தல் (3 புள்ளி)
2) பொருத்தமான உபகரணத்தைக் கொண்டு கரைசல்களை எடுத்தல் (3 புள்ளி)
3) பாசிச்சாயத்தாளைக் கொண்டு பரீட்ச்சித்தல் (3 புள்ளி)
4) அவதானத்தை அட்டவணையில் குறித்தல் (3 புள்ளி)
5) கரைசல்களை இனங்கண்டு பெயரிடல் (3 புள்ளி)

**மாணவர்களுக்கான செயலட்டை**

- பொருத்தமான உபகரணத்தைப் பயன்படுத்தி முகவைகளில் உள்ள கரைசலை எடுத்து மூன்று பாத்திரங்களில் போடவும்
- மூன்று கரைசல்களிலும் இரண்டு பாசிச்சாயத்தாள்களையும் இடவும்
- ஏற்படும் நிறமாற்றத்தை இனங் காண்க. அவதானங்களை அட்டவணையில் குறித்துக் கொள்க

| கரைசல் / பாசிச்சாயத்தாள் | A | B | C |
|---|---|---|---|
| சிவப்பு<br>நீலம் | | | |

- பாசிச்சாயத்தாள்களில் ஏற்படும் நிறமாற்றத்திற்கு ஏற்ப A,B,C கரைசல்களை அமில, மூல, நடுநிலை என வகைப்படுத்தி விடை தாளில் எழுதுக.

# பிரயோகச் செயற்பாட்டு (இல. 02)

**தேவையான பொருட்கள்**
- பொருத்தமான குவியத்தூரமுள்ள குழிவாடி
- ஆடித் தாங்கி
- மெழுகுதிரி
- தீப்பெட்டி
- மெழுகுதிரியை வைப்பதற்கான ஆதாரம்

**ஆசிரியருக்கான அறிவுறுத்தல்**
- மேலே கூறப்பட்ட உபகரணங்களை வைத்து வேலை மேசையைத் தாயார் செய்து மாணவர்களைச் செயற்பாட்டில் ஈடுபடுத்தவும்

**நியதிகள்**

1) ஆடியைத் தாங்கியில் பொறுத்துதல் (3 புள்ளி)
2) மெழுகுதிரியை முறையாகப் பொறுத்துதல் (3 புள்ளி)
4) சந்தர்ப்பம் - 1 இல் விம்பத்தை அவதானித்தல் (3 புள்ளி)
5) சந்தர்ப்பம் - 2 இல் விம்பத்தை அவதானித்தல் (3 புள்ளி)
6) அவதானிப்புகளை அட்டவணையில் குறித்தல் (3 புள்ளி)

**மாணவருக்கான செயலட்டை**
- குழிவாடியைத் தாங்கியில் பொறுத்தவும்
- முன் பின்னாக அசைக்கக் கூடியவாறு மெழுகுதிரியை ஆதாரமொன்றில் பொறுத்தவும்
- ஆடிக்கு 6 cm முன்னால் மெழுகுதிரியை வைக்கவும்
- தேன்றும் விம்பம்
  திரையில் பெறக்கூடியதா? இல்லையா?
  நிமிர்ந்ததா? தலைகீழானதா
  பெரியதா? சிறியதா? என்பதை அவதானிக்க.
- பின் மெழுகுதிரியை ஆடியிலிருந்து மேலும் 10 cm தூரத்தில் வைக்க
- தோன்றும் விம்பத்தின் மேலே குறிப்பிட்ட இயல்புகளை அவதானித்து கீழுள்ள அட்டவணையை உமது விடைதாளில் பிரதி செய்து அதில் குறிக்க.

| | திரையில் பெற முடியும் / முடியாது | நிமிர்ந்தது / தலை கீழானது | பெரியது / சிறியது |
|---|---|---|---|
| சந்தர்ப்பம் 1 | | | |
| சந்தர்ப்பம் 2 | | | |

This document was created with Win2PDF available at http://www.win2pdf.com.
The unregistered version of Win2PDF is for evaluation or non-commercial use only.
This page will not be added after purchasing Win2PDF.